RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s147

# அயோத்திதாசரின் சாதியமும் - இயக்கவியலும்

சி. அங்கயற்கண்ணி [அ,*], கா. கிருத்திகா [அ]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# Caste and dynamics of Iyothee Thass

C. Angayarkanni [a, *], K. Kiruthiga [a]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India.

* Corresponding Author:
ankay@gmail.com

Received: 04-11-2020
Revised: 24-06-2021
Accepted: 25-06-2021
Published: 25-06-2021

Check for updates

**ABSTRACT**

The message of history is that society and its dynamics have been subject to change over time. One of them is caste-based activities. The word "Satyam" is indelible all over India. There has been no change in the view of “caste discrimination” in civilization, education, and even in the developing world. In the early days, people were segregated on the basis of land and occupation. Then they became racist due to the arrival of Vanderis (disguised Brahmins). Racial discrimination sought to keep a large number of people in a state of disgrace. This situation continued for a long time. However, with the advent of British colonial rule in India, "caste discrimination" may have taken a turn for the worse. The missionaries' aim was to seize wealth and spread their religion. Only when we are all united can we restore our self. They said they could be released. Who pioneered the second stage. C. Iyothee Thass Pandit. He has publicly recorded the progress of his people based on Buddhism. This can be seen in the dominance of his views on literature.

**Keywords:** Dravidian Movements, Satyam, Brahmin, K. Ayodhya Das Pandit

## முன்னுரை

சங்க காலத்தில் நிலப் பாகுபாட்டின் அடிப்படையில் குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்த மக்கள், பின்பு தொழில்கள் அடிப்படையில் குழுக்களாக வாழ்ந்துள்ளனர். தொழில்கள் என்னும் போது அந்தந்த நிலங்களில் உள்ள வேலைகளைச் செய்து, பண்டமாற்று முறையில் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து குழுக்களாக வாழ்ந்துள்ளனர். கால மாற்றம், பிற நாட்டார் வருகை என ஆண்டான் - அடிமை சிந்தனை வந்தபோது ‘சாதியம்’ எழுகிறது. தொழில்களை வைத்து சாதியைக் கட்டமைத்துள்ளனர். வருணப்பாகுபாடு சாதியத்தின் தொடக்கப் புள்ளி, கடவுள் என்ற உருவ வழிபாடு தோன்றிய பிறகு கருவறையில் நின்று பூசை வழிபாடு செய்பவன் உயர் குடியோன் என்றும், கடவுள் கருவறைக் கழிவுகளைச் சுத்தம் செய்பவன் தாழ் குடியோன் என்று பல நூறு வருடங்களாக மக்களை நம்பவைத்து அவர்களை அடிமைப்படுத்தி வாழ்ந்து வந்துள்ளனர். “ஒரு பொய் பல முறை சொல்லப்படும் போது உண்மை போன்ற தோற்றம் பெறும்” அதுபோலத் தான் மக்களுக்கிடையே எதிர்வு நிலையை ஏற்படுத்தி அவர்களை ஆட்சி செய்கின்றனர். இந்நிலையை எதிர்த்து பலர் தங்களின் முன்னெடுப்புகளை கூறத் தொடங்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல மாற்றங்கள் ‘ஆண்டான் - அடிமை’ என்ற நிலையில் காலனிய ஏகாதிபத்தியத்தின் வருகையைப் பலர் எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் நிகழ்ந்த காலம். இப்போராட்டங்களுக்கு மத்தியில் தம் இனத்திற்கான முன்னெடுப்புகளைப் பொதுவெளியில் பேசிய

தலைவர்களில் க.அயோத்திதாச பண்டிதர் குறிப்பிடத்தக்கவர். அவர் முன் வைக்கும் சாதியமும் அது சார்ந்த அவரின் இயக்கத்தையும் பற்றி இங்கு காண்போம்.

## அயோத்திதாசரின் சாதியம் (எதிர்ப்பு)

பொதுவெளியில் நாம் அறிந்தோ, அறியாமலோ தூக்கிச் சுமக்கும் ஒரு காரணியாகவே சாதி உள்ளது. சாதி என்பது தீண்டாமைக்குரியது என்று சட்டம் இருந்தாலும் அவை வெறும் ஏட்டளவிலே உள்ளது. ஒரு கூட்டம் சாதியை அதிகாரத்தோடு கையாண்டு மக்களைத் தன் கட்டுப்பாட்டில் இயங்க வைக்க முயலுகின்றனர். மற்றொரு கூட்டம் கரிசனத்தோடு சாதியைக் கையாளுகின்றனர். எதுவாக இருந்தாலும் சாதி என்ற மையத்தைச் சுற்றியே நகர்ந்து கொண்டிருக்கின்றோம். பிராமணியத்தின் கற்பிதம் இரட்டை எதிர்மறை கொள்கை, வருணப்பாகுபாட்டு முறை, மேல் தட்டு மக்கள் உயர்வானவர்கள் என்றும் கீழ்த்தட்டு மக்கள் தாழ்வானவர்கள் என்றும் ஒரு வரையறை செய்து வைத்து செயல்படுகின்றது. வெறும் புறத்தோற்றத்தை வைத்தும், வேலைகளை வைத்தும் மக்களை நடத்துகின்றது பிராமணியக் கொள்கை.

இவர்கள் வரையறுத்த கொள்கைபடி, பிராமணீயம் கற்பித்த செயல்களான கழிவுகளை அகற்றுதல், சுமை தூக்குதல், சுத்தம் செய்தல் போன்ற பணிகளை செய்பவர்கள் தாழ்த்தப்பட்டோர்களே என்று கூறுகிறது. அயோத்திதாசர் தாழ்ந்த சாதி - தாழ்த்தப்பட்ட சாதி என்று வகைப்படுத்தி கூறுகிறார்.

குறவர், தோட்டி, வில்லியர், சக்கிலியர் போன்றோர் தாங்களாகவே தாழ்ந்த சாதிகள் என்றும், பறையர், சாம்பாவர், வலங்கையர் முதலானோர் தாழ்த்தப்பட்ட சாதிகள் என்றும் அயோத்திதாசர் கூறுகிறார்.

இந்தியாவில் பொதுவாக நிலவும் ஒரு கருத்து தாழ்ந்த சாதி, தாழ்த்தப்பட்ட சாதி இரண்டும் ஒன்றாக்கி அவர்களைப் பஞ்சமர் என்று அழைக்கின்றனர். ஆனால் இக்கருத்தை அயோத்திதாசர் மறுக்கிறார். தாழ்ந்த சாதியினர் தாங்களாகவே தாழ்த்திக் கொண்டு தாழ்ந்த சாதி ஆனார்கள். தாழ்த்தப்பட்ட சாதியினர் என்பவர் வேஷபிராமணர்களால் தொழில், பணம், கல்வி என அனைத்திலும் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு இழிநிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். ஆகையால் இவ்விரு சாதியும் ஒன்றெனக் கணக்கிடக் கூடாது என்கிறார் அயோத்திதாசர். 'பறையர்கள்' என்பவர் பூர்வ பௌத்தர் சாதி பேதமற்ற திராவிடர்கள் என்கிறார் தாசர்.

வேஷ பிராமணர்கள் தான் இச்சமூகத்தில் ஒரு பகுதி மக்களை மட்டும் தீண்டப்படாதவராகவும், ஒழுக்கமற்றவர்களாகவும் சித்திரித்துள்ளனர். பரந்துபட்ட இச்சமூகத்தில் கிடைக்கக்கூடிய வேலைகளைச் செய்து அந்தந்த நிலப்பரப்பில் மக்கள் வாழ்ந்துள்ளனர். அனைத்து வேலைகளும் செய்திருக்கையில் வெறும் தொழில் அடிப்படையில் ஒரு இனத்தவரை இழிகுலத்தார் என்று வரையறுத்துக் கூறுவது பொருத்தமானது அன்று. அயோத்திதாசர் பிராமணீயக் கருத்தியலை உடைத்தே பூர்வ பௌத்தர்களின் மறைக்கப்பட்ட வரலாற்றை கூறத் தொடங்குகிறார். சாதிகளுக்கிடையில் பண்பாட்டு மரபுகளும், கூறுகளும் வேறுபடுகிறது. தாசர் பௌத்தர்களிடமிருந்தே பண்பாட்டு மரபுகள் சென்றது என்று சில தரவுகளுடன் நிறுவ முயன்றுள்ளார். காலனிய ஆட்சியை ஏற்க அயோத்திதாசர் முன் வைக்கும் காரணம் சாதியப் பாகுபாடு அவர்களிடம் இல்லை. தீண்டத்தாகதோர் என ஒதுக்கப்பட்ட மக்களுக்குச் சில சலுகைகள் (கல்வி, நிலஉரிமை, அரசுப் பணி) போன்றவை வழங்கப்பட்டது. தாசர் காலனிய ஆட்சியால் கிடைக்கப்பெற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்த நன்மையை வரவேற்றேரே தவிர அவர்கள் மதத்தை ஆதரிக்கவில்லை.

## தாசர் கால தலித் நிலை

வேஷ பிராமணீயக் கொள்கைகளால் தாழ்த்தப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்ட மக்களை 'தலித்' என்கின்றனர். 'உடல் உழைப்பு' என்றாலே 'தலித்' மக்கள் தான் என்ற நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டனர். அவர்களைச் சுரண்டி பிழைத்து வந்த வேஷ பிராமணர்கள் சுகபோக வாழ்க்கையில் செழித்திருந்தனர். காலனிய ஏகாதிபத்தியம் வந்தபின் அவர்கள் நிலை சற்று ஆட்டம் கண்டது.

ஆனாலும் அவர்கள் பிராமணீயக் கருத்தியலை காலனியரிடம் உட்புகுத்த முயற்சி செய்து கொண்டிருந்தனர். ஏகாதிபத்தியம் மதத்தைப் பரப்புவது, கம்பெனியை விரிவுசெய்து ஆட்சி புரிவது மட்டுமே. ஆகையால் அவர்கள் மதத்தைப் பரப்புவதற்கு முதலில் தலித்களுக்குச் சில சலுகைகள் வழங்கலானார்கள். மதமாற்றம் செய்தால் இச்சலுகைகள் அனுபவிக்கலாம் என்றனர். பலர் மத மாற்றம் செய்துகொண்டு சிலர் அரசு பணிகளில் பணிபுரிந்தனர். இந்நிலையைத் தொடர விடக்கூடாது என்பதற்காக முக்கியப் பொறுப்புகளில் வேஷ பிராமணர்கள் தலைமையில் இருந்தனர். மக்களுக்கானக் குறைகளை காலனிய ஆட்சியாளரிடம் கொண்டு போக விடாமல் தடுத்துக் கொண்டிருந்தனர். வேஷ பிராமணர்களால் இம்மக்கள் அடைந்த வேதனைகளை அயோத்திதாசர் தான் நடத்திய ‘தமிழன்’ இதழில் பல முறை பதிவு செய்துள்ளார்.

கூலி வேலை செய்பவர்களுக்குச் சரியாகக் கூலி வழங்காமல் அவர்களிடம் வேலையை மட்டும் வாங்கிக் கொண்டனர்.

“பண்ணைக் கூலி

1 ஆணுக்குச் சராசரி நாள் 1க்குக் கூலி - ¾ அணா

1 பெண்ணுக்குச் சராசரி நாள் 1க்கு கூலி - ½ அணா

16 வயதுக்குட்பட்ட பையன்கட்கு நாள் 1க்குக் கூலி - ¼ அணா கூலியை நெல்லாகத்தந்தால்,

1 ஆணுக்கு நாள் 1க்கு - 3 ஆழாக்கு

1 பெண்ணுக்கு நாள் 1க்கு - 2 ஆழாக்கு

கேழ்வரகு (அ) சோளமாகத் தந்தால்:

1 ஆணுக்கு நாள் 1க்கு - 1 உழக்கு

1 பெண்ணுக்கு நாள் 1க்கு - 1 ஆழாக்கு” (Raj Gowthaman, 2004)

அவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் மறுக்கப்பட்டது. அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டன.

‘தலித்’ என்றாலே அசுத்தமானவர்கள் என்ற சிந்தனையை மற்றவர்களுக்கும், அந்த இனமக்களுக்கும் உட்புகுத்த வேஷ பிராமணர்கள் சில வழிகளைக் கையாண்டுள்ளனர். ‘சாதித்தடை’ ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு எவ்வித அடிப்படை தேவைகள் கூட கிடைக்கக்கூடாது என்பதற்கு அவர்கள் எடுத்த ஆயுதம்.

- பிராமணர்கள் நிலம், தெரு வழியாக செல்லக்கூடாது.
- சுத்தமான நீர் பிடிக்கவோ, அருந்தவோ, குளிக்கவோ கூடாது
- சுத்தமாக இருக்கக்கூடாது.
- ஆடு மாடுகள் மேய்க்கவோ, காட்டில் விறகு எடுக்கவோ கூடாது

பிராமணர்கள் கூறுவதை மீறிச் செயல்பட்டால் புளிய பிரம்பால் அடி, தொழுவில் மாட்டுதல், படுகொலை என பல துயர சம்பவங்கள் நடந்தேறியுள்ளதாக தாசர் குறிப்பிட்டுள்ளார். (Raj Gowthaman, 2004)

தலித்களுக்கென்று ஒதுக்கப்பட்ட எந்த அடிப்படைச் சலுகைகள், உரிமைகள் கிடைக்கவில்லை. மிருகங்களுக்கு கிடைக்கும் உரிமைகள் கூட இவர்களுக்கு கிடைக்கவில்லை.

தலித்துக்கள் எதிரே வந்தால் தீட்டு, அவர்கள் சுவாசித்த காற்று தீட்டு, தொட்டால் தீட்டு, நடந்தால் தீட்டு என எதற்கெடுத்தாலும் தீட்டு பார்த்து அவர்களே தாங்களை தீண்டத்தாகாதவர்கள் என நம்பும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தலித்துகள் தொட்டால் மட்டுமே தீட்டு, தலித்து பெண்களை இவர்கள் தொட்டால் இல்லை.

## தாசரின் எதிர்ப்பும் - ஏற்பும்

அயோத்திதாசப் பண்டிதர் வேஷ பிராமணர்களையும் அவர்தம் கருத்தியல்களையும் எதிர்த்தார். தான் நன்றாக வாழ்வதற்காக பிற இனமக்களை இழிவாகச் சித்திரித்து அதனால் வரும் ஆதாயத்தினால் வாழ்பவர்களே இழிகுலத்தோர், தீண்டத்தகாதோர் ஆவர். சமுதாயத்தில் ஒரு இனத்தவருக்கு மட்டும் எந்தவித அடிப்படை உரிமைகளும் தராமல் மறுத்தளிப்பது மிகக் கொடுமையான ஒன்று. இதைத் தான் தாசர் எதிர்த்து குரல் கொடுக்கத் தொடங்கினார். ஒரு மனிதனுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான உணவு, உடை, இருப்பிடம் இவை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று போராடத் தொடங்கினார். வருணப் பாகுபாட்டு முறையால் 'தலித்' இழந்ததை ஓரளவேனும் பெற்றுத்தர முயன்றார். 'கல்வி' தம் மக்களுக்கு அனைத்தையும் மீட்கொணரும் என்ற வலுவான நம்பிக்கை அவரது பேச்சிலும், எழுத்திலும் வெளிப்பட்ட வண்ணமே உள்ளது. கல்வி ஒருவனைச் சிந்திக்கத் தூண்டும், அவ்வாறு சிந்திக்கையில் தனக்கான முன்னெடுப்புகளை ஒவ்வொருவரும் முன் வைக்கத் தொடங்குவார்கள் என்பது தாசர் கூற்று.

சாதிக் கொடுமைகளைக் களைய தாசரின் முன் வைக்கும் தீர்வுகள் ஒரு சில உள்ளன.

"கிராமந்தோறும் பறையர் சிறுவர்களுக்கு கல்விச்சாலைகள் நிறுவி நான்காம் வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்க வேண்டும். கிராமங்களிலுள்ள தரிசு நிலங்களைப் பறையர்க்-குத் தர வேண்டும்." (G. Aloysius, 2019)

தொழில்களால் வகைப்படுத்தப்பட்ட மக்களை, வேஷ பிராமணர்களின் வருகையால் 'சாதி' என்ற பொய்க்கதை ஒன்றை உருவாக்கி அதையும் மற்றவர்கள் நம்ப வைத்துள்ளனர்.

'சாதி' என்பதை ஒரு கதையாடல் என்கிறார் தாசர். ஒரு பொய்யைப் பல முறை கூறி அதை உண்மை போன்ற ஒரு பிம்பத்தை ஏற்றி காட்டுகின்றனர். தாசரின் சாதியம் சார்ந்த இயக்கம் என்பது 'தலித்' அதாவது பட்டியலினத்தவர்களின் ஒட்டுமொத்த மக்களின் கூக்குரலாக ஒலிக்கிறது.

காலனிய ஆட்சியில் தான் தன் இனத்தவர்களான அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தர இயலும் என நம்பினார். பட்டியலினத்தில் பிறந்து காலனிய ஆட்சியின் கீழ் பணிபுரிந்த குடும்பத்திலிருந்து வந்த தனக்குக் கிடைத்த உரிமைகள், தன் இனத்தவருக்கும் கிடைக்கப் பாடுபட்டார். கல்வி, நிலஉரிமை, கல்வி உதவித்தொகை, பொதுக் குடிநீர் இடங்களைப் பயன்படுத்துதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தார். இவையனைத்தும் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமானால் அது காலனிய ஆட்சியால் தான் முடியும். அதற்காகத் தாசர் ஆங்கிலேயரது கொடுங்கோல் ஆட்சியை வரவேற்றார்.

காலனிய ஆட்சியை மட்டுமே தாசர் ஏற்றார். அவர்களின் மதத்தை ஏற்கவில்லை. ஆனால் அவர் இனத்தவர் பலர் கிறித்துவத்துக்கு மாறி, அதனால் கிடைக்கும் சில நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். பிராமணியம் கிறித்துவத்தையும் விட்டு வைக்கவில்லை. உயர் சாதியில் சிலர் கிறித்துவத்திற்கு மாறி அங்குள்ள பட்டியலின மக்களை முன்னேறவிடாமல் தடுத்தனர்.

பட்டியலினத்தவர்கள் ஏதாவது ஒரு வழியில் சற்று பெருமூச்சு விட நினைக்கையில், பிராமணீயக் கொள்கை அவர்களை மீண்டும் ஏதாவது ஒரு வகையில் சிறைபிடிக்கிறது.

தாசர் பிராமணர் எதிர்ப்புக்கு இரண்டு தரவுகளை முன் வைப்பதாக ஸ்டாலின் ராஜாங்கம் கூறுகிறார் (Stalin Rajangam, 2018).

"நாரதிய புராண சங்கைத் தெளிவு" என்ற பௌத்த ஏடு. "உள்ளூர் வழக்காறுகள்" (Stalin Rajangam, 2018)

வழக்காறுகளை அவர் பழமொழிகளாக மட்டும் பார்க்கவில்லை. அவற்றை வரலாறாக தாசர் பார்க்கிறார்.

மனிதன் தோன்றிய போதே 'சாதி' தோன்றியிருக்க முடியாது. 'சாதி' தோன்றிய போது அதற்கான எதிர்ப்புகளும் தோன்றியிருக்க முடியும். மதமாற்றம் சாதியை மாற்றாது. கத்தோலிக்கக்

கிறித்துவர்களாகவும் (ஆர்.சி), புரோட்டஸ்டண்ட் கிறித்துவர்களாகவும், மாறிய பின்பும் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டனர் மக்கள். மிஷினரிகள் வருகையால் தலித் இன பிள்ளைகளும் கல்வி கற்றனர்.

“இந்து ஆசார சீர்த்திருத்தக் காரர்கள் தாழ்ந்த சாதியாரை உயர்த்தப் போகிறோம் என்று வெற்றுச் சப்தம் இட, மிஷனரிகள் சப்தம் ஏதுமின்றி இலட்சக் கணக்கில் செலவழித்துக் கலாசாலைகளமைத்து எளிய குடிகளைப் படிக்க வைத்து உத்தியோகங்களில் அமர்த்தினர்.” (G. Aloysius, 2019)

‘தலித்’ இன பிள்ளைகள் கல்வி கற்பதை பல வேஷ பிராமணர்கள், உயர் வகுப்பினர் எதிர்த்தனர். இதிலிருந்து ‘மத மாற்றம்’ என்பது தன் இனத்தவருக்கு சுதந்திரம் பெற்று தராது சாதிபேதமற்ற ‘மனமாற்றம்’ தான் அவர்களுக்கான அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தரும் என்கிறார் தாசர். பௌத்தம் தழுவிய தாசர் தன் முற்போக்கான சிந்தனைகளைப் பட்டியலினத்தில் ஒரு குறிப்பிட்ட இனமான பறையர்களை முன்னிறுத்தியே நகர்ந்துள்ளார்.

## காலனியத்தின் நவீனம்

பிற நாட்டாரின் படையெடுப்பால் பல்வேறு அரசர்கள் ஆட்சி செய்து வந்துள்ளனர். மொழிக் கலப்பு, இனக் கலப்பு என்ற கலப்புநிலையை தமிழகம் கண்டுள்ளது. அரசாட்சி முறையிலிருந்து பல மாற்றத்தோடு காலனிய ஏகாதிபத்தியத்தின் ஆட்சி தொடங்கியது. வருணப் பாகுபாட்டின் அடிப்படையில் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் சற்று மூச்சு விட இடம் கிடைத்தாற் போன்ற நிலையை உருவாக்கியதில் காலனிய ஏகாதிபத்தியத்திற்கு பங்கு உண்டு எனலாம். ‘சாதியம்’ என்பது பற்றி ஏதும் அறியாத காலனிய ஆட்சயாளர்கள் அவர்களின் மதத்தையும், கம்பெனியையும் விரிவு செய்யும் நோக்கோடு வந்தவர்கள் நம் அனைவரையுமே ஆட்சி செய்ய நினைத்தார்கள் தவிர சாதி அடிப்படையில் நம்மை அடிமைகளாக ஆட்சி செய்யவில்லை. ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தை கீழ்படிய வைத்து அவர்களின் உடைமை மீது எவ்வித உரிமையும் கோரக் கூடாது, பிறப்பாலேயே அவர்கள் தாழ்வானவர்கள் தீண்டதகாதவர்கள் என்று பிராமணியக் கொள்கை ஒன்றைக் கட்டமைத்து அதை பின்பற்றியும் வந்துள்ளனர். இப்பிராமணியக் கொள்கையை கேள்விக்கு உட்படுத்தும் விதமாக தான் காலனிய ஏகாதிபத்திய ஆட்சி அமைந்தது. ஐரோப்பியரும், ஐரோப்பியமிஷனரிகளும் சாதி பேதம் பார்க்காததால் ஆட்சியில் தான் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான முன்னெடுப்புகளை பதிவு செய்தார்கள். இட ஒதுக்கீட்டு உரிமை, வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமை, கல்வி கற்க உரிமை, இலவச கல்வி, நிதி உதவி, தொழிற்கல்வி போன்றவற்றை நடைமுறைப்படுத்த காலனி ஏகாதிபத்தியத்தின் ஆட்சியை ஆதரித்தார்கள். ஐரோப்பியர்கள் சட்டத்தின் கீழ் செயல்பட்டனர். அச்சட்டத்தில் சாதியப்பாகுபாடு இல்லை. இவர்களின் சட்டம் இந்தியாவை நவீனமயமாக்களுக்கு கொண்டு சென்றது என்றாலும், எதிர்வுநிலையையும் பார்க்க வேண்டியது அவசியம். நவீன கால சூழலுக்கேற்ப பிராமணியம் தன் கொள்கைகளை மாற்றிக் கொள்ள புதிய சித்தாந்தங்களை உருவாக்க முயன்று கொண்டிருந்தது.

## முடிவுரை

நிலப்பாகுபாட்டில் தொடங்கிய பிரிவினை வாதம் வருணப்பாகுபாட்டில் வந்து நிற்கிறது. பன்முகத் திறமையாளரான அயோத்திதாச பண்டிதர் தன் இன மக்களுக்காகப் பல முன்னெடுப்புகளைச் செய்துள்ளார். அவரின் முதல் முன் வைப்பு சாதி மறுப்பு, அடிப்படைக் கல்வி, நில உரிமை, அடிப்படை உரிமைகள் என ஒரு சராசரி மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய உரிமைகளை முன்வைத்து தனது எதிர்ப்புகளையும் பதிவுசெய்துள்ளார். வேஷ பிராமணர்களையும், அவரின் கருத்தியல்களையும் எதிர்த்து அறப்போராட்டங்கள் செய்துள்ளார். அவர் நடத்திய ‘தமிழன்’ பத்திரிக்கையில் ‘தலித்’ வேஷ பிராமணர்களால் படும் இன்னல்களை பதிவிட்டுள்ளார். ‘தலித்’களை பூர்வ பௌத்தர்கள், ஆதி திராவிடர்கள் என்று பல இடங்களில் தரவுகளுடன் நிறுவ முயன்றுள்ளார். ‘தலித்’ மதமாற்றம் செய்தால் சில சலுகைகள் கிடைக்கும் என மதமாற்றம் செய்ததையும், காலனிய ஆட்சியை வரவேற்றுத் தம் பத்திரிக்கையில் கூறியுள்ளார். கிறித்துவத்திற்கு மதமாற்றம் செய்வதைக் கண்டிக்கவும் செய்தார். அயோத்திதாசர் பௌத்தம் சார்ந்து தன் கருத்தை கூறினாலும், தரவுகளுடன்

அதை நிறுவ முயன்றாலும், ‘சாதி’ என்பதை முழுக்க நீக்க வேண்டும் என பாடுபட்டுள்ளார். சாதியை எதிர்த்தே அவரின் இயக்கமும் அமைந்தது.

## References


Aloysius, Gyana., (2019) Ayodhidasar Sinthanaigal, Folklore Resources and Research Centre, St. Xavier's College, Tirunelveli, Tamil Nadu, India

Dharmaraj, T., (2019) IyotheeThassar: Paarpanar mudhal Parayar varai, Kizhakku Pathippagam, Chennai, Tamil Nadu, India

Marudhanayagam, P., (2016) Oru Poorva Pouthanin Saatchiyam, Thadagam Publications, Chennai, Tamil Nadu, India

Raj Gowthaman, (2004) K Ayothidhasar Aivugal, Kalachuvadu Publications, Nagercoil, Tamil Nadu, India.

Stalin Rajangam, (2018) Ayothithasar: Vaazhum Poutham, Kalachuvadu Publications, Nagercoil, Tamil Nadu, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL



**About the License:**

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License